**நுண்நிதிக் கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் ஆதிவாசிகள்**

2023/11/03

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் என்பது சுயாதீனமான அரசியல் சார்பற்ற ஓர் அமைப்பாகும் என்பதோடு, பிரதானமாக ஆளுகை மற்றும் முரண்பாட்டுத் தீர்வுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறது. சிறந்த அரசியல் கலாச்சாரம் மற்றும் சமூகச் சூழலைக் கட்டியெழுப்புவதற்காக பொதுக் கொள்கைகளை விமர்சன ரீதியாக ஆராய்ந்து மாற்று வழிகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றை விரிவாக்கும் ஆராய்ச்சி மற்றும் அழுத்தம்கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

இலங்கையின் ஆதிவாசி சமூகத்தினர் எனப்படுவோர் சுயாதீன அடையாளத்துடன் கூடிய, சகல உரிமைகள் மற்றும் சலுகைகளும் கிடைக்கப்பெறவேண்டிய மரியாதைக்குரிய ஓர் பிரஜைகள் குழுவாகும். ஆனாலும் இன்றைய நிலையில் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்து வரும் ஆதிவாசி சமூகத்தினர் இன்னோரான நெருக்கடி நிலைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மேற்படி பலதரப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் தற்போது பூதாகரமான நெருக்கடியாக மாறியிருப்பது நுண்நிதிக் கடன் நெருக்கடியாகும்.

நுண்நிதிக் கடன்களை வழங்குவதையும் அத்தகைய கடன்களை வழங்கும் நிறுவனங்களையும் நாங்கள் நிராகரிக்கவில்லை என்பதோடு இதனை குறைந்த வருமானம் பெறுகின்ற வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்ற சமூகத்தினருக்கு சாதகமான ஒரு வாய்ப்பாகவே நாம் காண்கிறோம். ஆனாலும் கடன் வழங்கல், கடனை மீள அறவிடுதல் மற்றும் வட்டி வீதங்கள் போன்ற விடயங்கள் தொடக்கம் அதனை நடைமுறைப்படுத்துவதில் நிலவும் முறையற்ற தன்மை, சட்ட விரோதமான நிலைமைகள் மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத முறைமைகள் போன்ற காரணங்களால் நுண்நிதிக் கடன்களைப் பெற்றுக்கொண்ட பிரஜைகள் நாளுக்கு நாள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும் நிலைமையைக் காணக்கூடியதாகவுள்ளது. அவர்களுள் ஆதிவாசி சமூகத்தினர் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றனர்.

குறிப்பாக ஆதிவாசி சமூகத்தினர் ஒரு தனித்துவமான மொழியியல் அடையாளத்துடன் கூடிய பிரஜைகள் குழுவினராவர். அவர்கள் பேச்சு வழக்கில் 'வேடுவ மொழியை' பயன்படுத்திய போதிலும் எழுத்து மொழியாகப் பயன்படுத்துவது சிங்கள மொழியையாகும். பெரும்பாலானவர்களுக்கு சிங்கள மொழியைப் படிக்கவோ எழுதவோ தெரியாத நிலைமையே காணப்படுகின்றது. அதேவேளை வாகரை மற்றும் மூதூர் கரையோரப் பிரதேசங்களில் வாழும் கடல் ஆதிவாசிக் குழுக்கள் அல்லது கரையோர வேடுவ மக்கள் பயன்படுத்துவது அவர்களுக்கு பரிச்சயமான தமிழ் மொழியையாகும். அவர்களிடத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ் மொழி தொடர்பிலான கல்வியறிவு இல்லை.

இவ்வாறான மொழிச் சிக்கல்கள் நிலவுகின்ற சூழ்நிலைக்கு மத்தியில் நுண்நிதி கடன் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே பரிமாறப்படும் ஒப்பந்தங்கள் (Agreements) பெரும்பாலும் அவர்களுக்குப் புரியாத மொழியிலேயே காணப்படுகின்றது. ஒருசில நிறுவனங்கள் தற்போது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் உரிய ஆவணங்களை வழங்குகின்ற போதிலும் மேற்கூறிய ஆதிவாசி சமூகத்தினருக்கு அவற்றின் உள்ளடக்கம் பற்றிய தெளிவு எதுவுமில்லை. அவர்கள் எந்தவொரு தெளிவும் இல்லாமல் உரிய ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதோடு அதன் பிறகு சட்டரீதியாக இந்த வலைக்குள் மாட்டிக்கொள்கின்றனர்.

ஆதிவாசி சமூகத்தினர் அதிகமாக ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் வாழ்கின்றனர். இவர்கள் தம்பான, ரத்துகல, பொல்லேபெத்த, தலுகான, திம்புலாகல, வாகரை, மூதூர் போன்ற பிரதேசங்களில் பிரதேச ரீதியாக வாழ்கின்றனர். காடுகளை இழந்து பெரும் சமூகத்திற்குள் நுழைந்துள்ள இவர்கள் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார ரீதியில் பல இன்னல்களை சந்தித்து வரும் இவ்வேளையில் இந்தக் கடன் வலையில் சிக்கியிருப்பது அவர்களது வாழ்க்கையை மேலும் சிரமத்திற்குள் இட்டுச் செல்லும் நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

ஆதிவாசிகளின் தலைவர் ஊரு வரிகே வன்னில அத்தோ உட்பட பிராந்திய தலைவர்கள் தமது சமூகம் முகம்கொடுத்திருக்கும் நுண் நிதிக் கடன் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி, மத்திய வங்கி ஆளுநர் ஆகியோருக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ள அதேவேளை, தமது சமூகத்தினர் முகம் கொடுத்துள்ள இந்த கடன் நெருக்கடிக்கு மானியம் வழங்குதல், கடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுகின்ற நடவடிக்கையை முறையான வகையில் மேற்கொள்ள வேண்டுமென்பதே இவர்களது வேண்டுகோளாக உள்ளது.

மேற்படி விடயத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அதேவேளை ஊரு வரிகே வன்னில அத்தோ இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த காணொளியும் இணைக்கப்பட்டுள்ளது. இதனை உங்களது ஊடகங்களில் வெளியிட்டு, இந்நாட்டில் வாழ்கின்ற பூர்வீக சமூகத்தினர் முகம்கொடுத்துள்ள நுண்கடன் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையிலான சமூகக் கலந்துரையாடலை உருவாக்குவதற்கான பங்களிப்பினைப் பெற்றுத் தருமாறு கௌரவமாக கேட்டுக்கொள்கிறோம்.

**சகல ஆதிவாசிகள் சமூகத்தினர் சார்பாக,**
**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**